# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண். 10
## வணிகவரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2016–2017

கே.சி வீரமணி
வணிகவரித் துறை அமைச்சர்

(C)
தமிழ்நாடு அரசு
2016

# பொருளடக்கம்


| வரிசை எண். | | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|---|
| 1. | | முன்னுரை | 1 |
| 2. | | நிர்வாக அமைப்பு | 2 |
| | 2.1 | வரிவிதிப்புப் பிரிவு | 3 |
| | 2.2 | தணிக்கைப் பிரிவு | 3 |
| | 2.2.1 | மாநிலக் கணக்காயரின் தணிக்கை | 4 |
| | 2.3 | மேல்முறையீட்டு பிரிவு | 5 |
| | 2.3.1 | முதல் மேல்முறையீடு | 5 |
| | 2.3.2 | தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் | 6 |
| | 2.3.3 | உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வரி வழக்குகள் | 7 |
| | 2.4 | செயலாக்கப் பிரிவு | 8 |
| | 2.4.1 | செயலாக்கப் பிரிவு கோட்டங்கள் | 8 |
| | 2.4.2 | மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவு (Inter State Investigation Cell) | 9 |
| | 2.4.3 | மாநில வர்த்தகப் புலனாய்வு அலகு (State Business Intelligence Unit) | 10 |
| | 2.4.3.1 | கோட்ட வர்த்தகப் புலனாய்வு அலகு (Divisional Business Intelligence Unit) | 11 |
| 3. | | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு (Statistics and Research Cell) | 11 |
| 4. | | வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் | 13 |
| 5. | | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 15 |
| 6. | | வருவாய் வசூலின் போக்கு | 16 |
| 7. | | கடந்த ஐந்தாண்டுகளில் சட்டங்கள் வாரியான வருவாய் | 17 |

| | | | |
|---|---|---|---|
| 8. | | வரி நிர்வாகம் | 18 |
| 9. | | மாநில மொத்த உற்பத்தி விகிதத்துடன் வரிவருவாய் ஒப்பீடு (Gross State Domestic Product Ratio) | 18 |
| 10. | | தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழான வரி விலக்குகள் / குறைப்புகள் | 19 |
| 11. | | நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள் | 20 |
| 12. | | சரக்கு மற்றும் சேவை வரி (GST) | 21 |
| 13. | | வணிகர் நலன் | 22 |
| | 13.1 | வணிகர் நல வாரியம் | 22 |
| | 13.1.1 | செயல்பாடு | 22 |
| | 13.1.2 | உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் | 22 |
| | 13.1.3 | நலத்திட்ட உதவிகள் | 23 |
| | 13.2 | வணிகர்களின் குறை தீர்க்கும் நாள் | 23 |
| 14. | | மத்திய விற்பனை வரி இழப்பீடு | 24 |
| 15. | | கணினிமயமாக்கல் | 24 |
| | 15.1 | முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் | 24 |
| | 15.1.1 | வணிகர்களின் பதிவு | 27 |
| | 15.1.2 | இணைய வழியில் சோதனைச் சாவடி படிவங்கள் உருவாக்குதல் (படிவம் JJ, KK, LL மற்றும் MM) | 27 |
| | 15.1.3 | மாதாந்திர நமூனாக்கள் சமர்ப்பித்தல் | 28 |
| | 15.1.4 | இணைய வழியில் வரி செலுத்துதல் | 28 |
| | 15.1.5 | மின்னணு முறையில் 'C' மற்றும் 'F' படிவங்களை உருவாக்கிக் கொள்ளுதல் | 29 |
| | 15.1.6 | ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுவதற்காக, கேட்பு படிவத்தைத் தாக்கல் செய்யும் வசதி | 29 |

| | | | |
|---|---|---|---|
| | 15.1.7 | இணையதள வழியில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பித்தல் | 30 |
| | 15.2 | தகவல்கள் மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் | 30 |
| | 15.3 | மற்ற இணையவழி சேவைகள் | 31 |
| | 15.4 | வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு (TINXSYS) | 32 |
| 16 | | உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 33 |
| | 16.1 | சென்னை நீங்கலாக பிற இடங்களில் வணிகவரி வரிவிதிப்பு வட்டங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 33 |
| | 16.2 | சென்னையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 34 |
| | 16.3 | சென்னை, சேப்பாக்கம் எழிலகத்திலுள்ள வணிகவரி ஆணையர் அலுவலகத்தை நவீனப்படுத்துதல் | 35 |
| | 16.4 | ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம் கட்டுதல் | 35 |
| | 16.5 | கட்டடப் பராமரிப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல் | 36 |
| 17. | | வாகனங்கள் வாங்குதல் | 37 |
| 18. | | 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 37 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2016–2017

# வணிகவரித் துறை

**முன்னுரை**

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 76 விழுக்காட்டினை வணிகவரி அளித்து வருகிறது. வணிக வரியானது மதிப்புக் கூட்டு வரி, விற்பனை வரி, மத்திய விற்பனை வரி, கேளிக்கைகள் வரி, நுழைவு வரி, ஆடம்பர வரி போன்றவைகளை உள்ளடக்கியதாகும்.

உலகளாவிய மற்றும் நாடு தழுவிய மந்தமான பொருளாதார சூழ்நிலையிலும், தொடர்ந்து பெட்ரோலிய பொருட்களின் விலைக் குறைப்பிலும், மாநிலத்தின் ஆறு வருவாய் மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உற்பத்தி மற்றும் வணிக நடவடிக்கைகளில் ஏற்பட்ட பேரிழப்பிலும்கூட வணிகவரித்துறை 2015–2016–ஆம் நிதியாண்டில் ரூ.61,709.58 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இது கடந்த 2014–2015–ஆம் ஆண்டைவிட ரூ.1,394.97 கோடி அதிகமாகும். வரி வருவாயை பெருக்குவதற்காக வரிவிகிதத்தை அதிகரிக்காமலும், புதிய

வருவாய் அதிகரிக்கும் முறைகளை நடைமுறைப்படுத்தாமலும், இந்த இலக்கை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வரிக்கடப்பாட்டினை முன்னேற்றுவதற்கும், வரி செலுத்துவோருக்கு சிறந்த சேவைகளை அளித்திடவும் மற்றும் செயல்படுத்துவதற்கான செலவினங்களை குறைக்கவும், வணிகவரித் துறையானது வரி நிர்வாகத்தையும் கொள்கைகளையும் தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகிறது.

## 2. நிர்வாக அமைப்பு

வணிகர்களுக்கு சிறந்த சேவை அளிக்கவும் மற்றும் திறமையான வரி நிர்வாகம் வழங்கப்படவேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு துறையின் நடைமுறை சார்ந்த மற்றும் கோட்ட அளவிலான நிர்வாக அமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை தலைமையிடத்தில் வணிகவரி ஆணையர் நிர்வாகத் தலைவராக செயல்பட்டு வருகிறார். அவருக்கு உதவியாக, ஐந்து கூடுதல் ஆணையர்கள் மற்றும் ஓர் இணை ஆணையர் (நிர்வாகம்) ஆகியோர் உள்ளனர். துறையானது, பணிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, அதன் பல்வேறு பொறுப்புகளை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு நான்கு வெவ்வேறு பிரிவுகளில் செயல்படுத்தி வருகின்றது:–

## 2.1 வரிவிதிப்புப் பிரிவு

வரி நிர்வாகத்தில் அடிப்படையாக திகழும் **328** வரிவிதிப்பு வட்டங்கள், உதவி ஆணையர்கள் / வணிக வரி அலுவலர்கள் தலைமையில் மாநிலம் முழுவதிலும் இயங்கி வருகின்றன. இந்த வரி விதிப்பு வட்டங்கள் மாவட்ட / சரக அளவில் **40** நிர்வாகப் பிரிவின் துணை ஆணையர்களாலும், கோட்ட அளவில் **10** இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மற்றும் கோயம்புத்தூர் மண்டலங்களில், துறையால் ஈட்டப்படும் வரியில் **60** விழுக்காடு அளவிற்கு பங்கு வகிக்கும் அதிக வரி செலுத்துவோர்களுக்கு சென்னையில் இணை ஆணையரை தலைமையாகக் கொண்ட அதிக வரி செலுத்துவோருக்கான பிரிவும், கோயம்புத்தூரில் துணை ஆணையரைத் தலைமையாகக் கொண்ட அதிக வரி செலுத்துவோருக்கான பிரிவும் வரிவிதிப்பு வட்டங்களாக செயல்பட்டு வருகின்றன.

## 2.2 தணிக்கைப் பிரிவு

தணிக்கை என்பது எந்த ஒரு வரி நிர்வாகத்திற்கும் உள்ளார்ந்த பகுதியாகும். சரியான வரித்தொகையைக் கண்டறிதல், வரிவிதிப்பில் ஏற்படும் தவறுகளைச்

சுட்டிக்காட்டுதல், வரித் திருப்புகை மூலம் அரசின் நிதி கசிந்தோடாமல் ஆவணங்களை சரி பார்த்து தடுத்தல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான அல்லது தகாத செயல்களைத் தடுத்து நிறுத்துதல் போன்றவை தணிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

ஒவ்வொரு வணிகவரி கோட்டமும் ஓர் உதவி ஆணையர் மற்றும் வணிகவரி அலுவலர் தலைமையில் உள்ளீட்டுத் தணிக்கைக் குழுவை கொண்டுள்ளது. இந்த உள்ளீட்டு தணிக்கைக் குழுக்கள் இணை ஆணையர்களால் வகுக்கப்படும் அட்டவணையின் அடிப்படையில் வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் தொடர் தணிக்கையினை மேற்கொள்கின்றன.

### 2.2.1 மாநிலக் கணக்காயரின் தணிக்கை

வரிவிதிப்பு வட்டங்களில் மாநிலக் கணக்காயரால் வருடாந்திர தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், துறையின் அவ்வப்போதான செயல்திறன் தணிக்கை தவிர பல்வேறு பொருள் சார்ந்த ஆய்வும் மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள், வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் அரசுச்

செயலாளர் அவர்களால் தொடர்ச்சியாக நடத்தப்படும் துறையளவிலான தணிக்கைக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டங்களில், வணிகவரி ஆணையர் மற்றும் மாநில கணக்காயர் அலுவலகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

## 2.3 மேல்முறையீட்டு பிரிவு

### 2.3.1 முதல் மேல்முறையீடு

உதவி ஆணையர் வரையிலான வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையரிடமும், துணை ஆணையரின் வரிவிதிப்பு ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு இணை ஆணையரிடமும் உள்ளது. மாநிலத்தில் 20 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டுப்பாட்டின் கீழான மேல்முறையீட்டுப் பிரிவில் இயங்கி வருகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில், ஒவ்வொரு மேல்முறையீட்டு மன்றத்திலும் துறையின் வழக்குகளை முன்வைத்திடும்

பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

### 2.3.2 தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ளவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணி / வருமான வரித்துறை / மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அல்லது இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் யாரேனும் ஒருவர் இரண்டாவது உறுப்பினராக நியமிக்கப்படுவார். கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள துறை அலுவலர் ஒருவர் துறை உறுப்பினராகவும் இத்தீர்ப்பாயத்தில் நியமிக்கப்படுவார்.

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கூடுதல் அமர்வுகள், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித்துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் இயங்கி வருகின்றன. வழக்குகளில் துறையின் வாதத்தினை முன்வைத்திடும் பொருட்டு இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் வாதிடுவர்.

### 2.3.3 உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வரி வழக்குகள்

கூடுதல் அரசு வழக்குரைஞர் மற்றும் அரசு வழக்குரைஞர் உதவியுடன் ஓர் அரசு சிறப்பு வழக்குரைஞர்(வரிகள்), வரி வழக்குகள் தொடர்பாக துறையின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை அமர்விலும் வாதிடுவர். துறைக்கு எதிரான நீதிப் பேராணைகள் தொடர்பாகவும் இவர்கள் வாதிடுவர். தமிழ்நாடு பதிவு வழக்கறிஞர் ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் துறை சார்பான வழக்குகளில் வாதிடுவார்.

## 2.4 செயலாக்கப் பிரிவு

### 2.4.1 செயலாக்கப் பிரிவு கோட்டங்கள்

இப்பிரிவு, மாநிலம் முழுவதும் எட்டு செயலாக்கக் கோட்டங்களையும், சென்னையில் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு ஒன்றையும் கொண்டுள்ளது. அனைத்து செயலாக்கப் பிரிவுகள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு இணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. பொருட்கள் நடமாட்டத்தினை கண்காணிப்பது, திடீர் சோதனைகள் நடத்துவது மற்றும் வரிவிதிப்புக்குரியவரர்களது வணிக இடங்களில் தள தணிக்கை மேற்கொண்டு, வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து அதனை கட்டுப்படுத்துதலே செயலாக்கப் பிரிவின் முதன்மைப் பணியாகும்.

ஆந்திரபிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லைகளில் அமைந்துள்ள 28 சோதனைச் சாவடிகளின் மூலம் மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்து கண்காணிக்கப்படுகிறது. துறைமுக சரக்கு மையங்கள், மற்றும் ரயில் நிலையங்களில் 13 சோதனை முனையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர மாநிலத்திற்குள்ளான சரக்குகளின் நடமாட்டத்தையும்

61 சுற்றும் குழுக்கள் கண்காணித்து வருகின்றன. வரி ஏய்ப்பு தொடர்பான புலனாய்வு மேற்கொள்ளவும், தள தணிக்கை மேற்கொள்ளவும் மற்றும் வணிகர்களின் தொழில் இடத்தில் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளவும் வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிகவரி அலுவலர்களைக் கொண்ட 144 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய தணிக்கை மற்றும் ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்படும் கருத்துருக்கள் சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலர்களுக்கு அதனை நடைமுறைப் படுத்தி வரிவிதிப்பு மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகின்றன.

### 2.4.2 மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுப் பிரிவு

ஓர் இணை ஆணையர் தலைமையிலான மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு, மாநிலங்களுக்கிடையேயான வணிகப் பரிவர்த்தனைகளில் வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்த, பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கான தகவல்களை சரிபார்க்கும் பொருட்டு தகவல் பரிமாற்றம் செய்து கொள்கிறது. அவ்வாறு தகவல்களை சரிபார்ப்பதன் மூலம் தேவைப்படும் இனங்களில் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்துவதற்காக அனுப்பப்படுகின்றன. சில இனங்களில் புலனாய்வுக் கோப்புகள்

உருவாக்கப்பட்டு மேல் நடவடிக்கையின் பொருட்டு சம்பந்தப்பட்ட செயலாக்கப் பிரிவு இணை ஆணையருக்கு அனுப்பப்படுகின்றன.

### 2.4.3. மாநில வர்த்தகப் புலனாய்வு அலகு

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், ஆணையர் அவர்களின் நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் வர்த்தகப் புலனாய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஓர் இணை ஆணையர் தலைமையின் கீழ் ஒரு துணை ஆணையர், நான்கு உதவி ஆணையர்கள், ஓர் உதவி கணினி நிரலர்(Computer Programmer) மற்றும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான வர்த்தகப் புலனாய்வு அலகு, வணிகர்களின் நமூனாக்கள், துறையின் சோதனைச் சாவடிகளில் பெறப்பட்ட ஆவணங்கள், மத்திய அரசு நிறுவனங்களான மத்திய கலால் மற்றும் சுங்கவரி வாரியம் (CBEC), மத்திய நேரடி வரி வாரியம் (CBDT), வெளிநாட்டு வர்த்தகத் தலைமை இயக்குநர் (DGFT) ஆகியவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட விவரங்கள் மற்றும் பிற மாநிலங்களின் நமூனாக்கள் மற்றும் சோதனைச்சாவடி தகவல்கள் ஆகியவற்றை பெரிய அளவிலான வரி ஏய்ப்புகளைக் கண்டறிவதற்கு பயன்படுத்துகிறது. இவ்வாறு

பெறப்படும் தகவல்களைத் தரவு பகுப்பாய்வு மேற்கொண்டு இதன் மூலம் முக்கிய அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு துறையின் நிர்வாகப் பிரிவு மற்றும் செயலாக்கப் பிரிவிற்கு வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்படுகின்றன.

### 2.4.3.1 கோட்ட வர்த்தகப் புலனாய்வு அலகு

கோட்ட அளவிலான வர்த்தகப் புலனாய்வு அலகுகள் ஒவ்வொரு செயலாக்கக் கோட்டத்திலும் இணை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வலுவலர்கள் மாநில வர்த்தகப் புலனாய்வு அலகைப் போன்றே கோட்டத்திற்குட்பட்ட உள்ளூர் அதிகாரிகள் மற்றும் ஆதாரங்களைக் கொண்டு சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் புலனாய்வு மேற்கொள்கின்றனர்.

## 3. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

தலைமையிடத்தில் புள்ளியியல் துறை இணை இயக்குநர் தலைமையில் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு உள்ளது. இப்பிரிவில், ஓர் இணை இயக்குநர் (புள்ளியியல்), இரு புள்ளியியல் அலுவலர்கள், ஒரு புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் இரு உதவி புள்ளியியல் ஆய்வாளர்களும் உள்ளனர்.

ஒவ்வொரு வணிகவரிக் கோட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஓர் இளநிலை ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையர்களுக்கு உதவியாக ஒவ்வொரு சரக / வணிகவரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு கீழ்கண்ட அறிக்கைகள் / வெளியீடுகளை தொடர்ந்து வெளியிடுகின்றன:-

1. “வணிகவரித் துறை – “நிர்வாக அறிக்கை” ஆண்டுதோறும்
2. “வணிகவரித் துறையின் முக்கிய குறியீடுகள்” – ஆண்டுதோறும் ‘
3. வணிகவரித் துறையின் புள்ளி விவரத்தொகுப்பு – காலமுறை அறிக்கை – ஆண்டுதோறும்
4. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பகுப்பாய்வு – மாதந்தோறும்
5. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் பகுப்பாய்வு– மாதந்தோறும்
6. சட்ட வாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை – மாதந்தோறும் மற்றும்;
7. கோட்டங்களின் மாதாந்திர செயல்பாடு குறித்த அறிக்கை – மாதந்தோறும்

**4. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்**

சென்னையில் உள்ள வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் **1982–**ஆம் ஆண்டு முதல் இணை ஆணையர்(வணிகவரி) பணித் தரத்தில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகிறது. வணிகவரித் துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 'பணியிடைப் பயிற்சி' மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளிப்பது இந்த பயிற்சி நிலையத்தின் நோக்கமாகும். வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டல பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. துறையிலுள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படை கணினிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மேலும், துறை சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளை திறம்படக் கையாளும் பொருட்டு, வரி ஏய்ப்பு மற்றும் மோசடி அபாயத்தை எதிர்கொள்ளும் மேலாண்மை (Fraud Risk Management), வழக்கு முறைமைகளை கற்பித்தல் (Case Method Teaching), குழு அமைத்து செயல்படுதல் (Team Building Activities), திறமையின் மூலம் வெற்றி பெறுதல் (Success Through Excellence) மற்றும் இணையதள தடயவியல் (Cyber Forensics) போன்ற

பயிற்சிகள் அந்தந்த பிரிவுகளிலுள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்கள் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்களுக்கு வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

**2015–2016–**ஆம் ஆண்டில் கீழ்க்காணும் சிறப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டன–

- வணிகவரித் துறை இணை ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்களுக்கு வெளியிட உறைவிட மேலாண்மை பயிற்சி (Outbound Residential Managerial Training).
- புதுச்சேரி வணிகவரித் துறையின் உதவி வணிகவரி அலுவலர்களுக்கு துறை சார்ந்த அடிப்படைப் பயிற்சி (Induction training)
- சென்னை மற்றும் கோவை செயலாக்கப் பிரிவில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ERP 9 மென்பொருள் தொடர்பான பயிற்சி

## 5. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வணிகவரித் துறையால் பின்வரும் சட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன:–

1. **2006–** ஆம் ஆண்டு தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் **(1.1.2007** முதல்**)**

2. **1956–** ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்

3. **1959–** ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் **(31.12.2006** வரை**)**

4. **1970–**ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் **(31.12.2006** வரை**)**

5. **1939–** ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்

6. **1935–**ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம்

7. **1981–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம்

8. **1990–**ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம்

9. 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம் (சென்னை உயர்நீதிமன்றம் தனது 23.3.2007 நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது. இதன் மீதான மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)

10. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம்

**6. வருவாய் வசூலின் போக்கு**

பொருளாதாரத்தில் பொதுவான மந்த நிலை ஏற்பட்டுள்ள போதிலும், வரி ஏய்ப்பினைத் தடுத்திட மேற்கொள்ளப்பட்ட சிறந்த கண்காணிப்பு மற்றும் தீவிரமான செயலாக்கத்தின் விளைவால் வரி வருவாய் வசூலில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை இத்துறை தக்க வைத்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் துறையால் நிர்வகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு:–

| வருடம் | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2011–2012 | 39,545.00 |
| 2012–2013 | 47,885.00 |
| 2013–2014 | 56,851.87 |
| 2014–2015 | 60,314.61 |
| 2015–2016 | 61,709.58 |

## 7. கடந்த ஐந்தாண்டுகளில் சட்டங்கள் வாரியான வருவாய்

கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு சட்டங்கள் வாரியான வருவாய் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | சட்டம் | 2011–2012 | 2012–2013 | 2013– 2014 | 2014–2015 | 2015–2016 |
|---|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம் | 33,997 | 42,038 | 51,245 | 53,930.47 | 54,804.54 |
| 2 | மத்திய விற்பனை வரிச் சட்டம் | 2,819 | 2,904 | 3,116 | 3,811.17 | 4,037.76 |
| 3 | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 259 | 261 | 218 | 195.21 | 211.12 |
| 4 | கேளிக்கை வரிச் சட்டம் | 59 | 70 | 68 | 82.97 | 106.29 |
| 5 | பந்தய வரிச் சட்டம் | 7 | 6 | 5 | 5.60 | 5.65 |
| 6 | ஆடம்பர வரிச் சட்டம் | 256 | 290 | 299 | 319.26 | 357.03 |
| 7 | நுழைவு வரிச் சட்டம் (வாகனம்) | 2,148 | 2,316 | 1,900 | 1,969.93 | 2,187.19 |
| | **மொத்தம்** | **39,545** | **47,885** | **56,851** | **60,314.61** | **61,709.58** |

## 8. வரி நிர்வாகம்

வணிகவரித் துறையில் குறைந்த செலவில் மேம்பட்ட வருவாயினை அடைவதில் நிர்வாகத் திறமை ஆண்டுக்காண்டு மேம்பட்டுள்ளது. நிர்வாக செலவினமானது வணிகவரி மொத்த வசூலில் ஒரு விழுக்காட்டைக்கூட எந்த வருடத்திலும் கடந்ததில்லை. **2015–2016–**ஆம் ஆண்டிற்கான மொத்த வணிகவரி வருவாயில், **0.46** விழுக்காடு நிர்வாகச் செலவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 9. மாநில மொத்த உற்பத்தி விகிதத்துடன் வரி வருவாய் ஒப்பீடு (Gross State Domestic Product Ratio)

மாநில மொத்த உற்பத்தியின் அடிப்படையில் இந்தியாவில் நான்காவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. வருவாய் வசூலினை மாநில மொத்த உற்பத்தியுடன் ஒப்பிடுவதனால், அதன் ஆழம் (வரி வீதங்கள்) மற்றும் அகலத்தினை (வரி ஏய்ப்பினைத் தவிர்த்தல்) உணர வழி வகுக்கிறது.

**2015–2016–**ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தியுடனான நிகர வணிகவரி வருவாய் விகிதம் சீராக **5.09** விழுக்காடாக உள்ளது. இது வணிகவரி வசூலின் சீரான முன்னேற்றத்தைக் காட்டுவதாக உள்ளது.

மேலும், திறன் விகிதம் (மாநில மொத்த உற்பத்தியுடனான வரி வருவாய் விகிதத்தினை நிலையான வரி விகிதத்தால் வகுத்து கணக்கிடப்படுகிறது) வரி குறியீட்டு கணக்கீடு மற்றும் வருவாய் ஈட்டுதலில் மதிப்புக்கூட்டு வரியின் திறன்பாடு 2010–ஆம் ஆண்டிலிருந்து சீரான முன்னேற்றமடைந்துள்ளது. மேம்பட்ட செயலாக்கப் பணிகள் மற்றும் முழுமையான கணினிமயமாக்கல் திட்டம் (Total Solution project) ஆகியவற்றை நடைமுறைப் படுத்தும் போது இந்த திறன் விகிதம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**10. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழான வரி விலக்குகள் / குறைப்புகள்**

(அ) ஏலக்காய் மீதான மதிப்புக் கூட்டு வரி **01.04.2015** முதல் **5** விழுக்காட்டிலிருந்து **2** விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

(ஆ) அனைத்து வகையான ஒளி உமிழ் டையோடு விளக்குகள் (LED lamps), காற்றழுத்த கருவிகள் (air compressors), **10** குதிரைத்திறன் வரையிலான மோட்டார் பம்புகள் மற்றும் அவற்றின் பாகங்கள் மற்றும் அலைபேசிகள் (mobile phones) ஆகியவற்றின் மீதான

மதிப்புக்கூட்டு வரி, **14.5** விழுக்காட்டிலிருந்து **5** விழுக்காடாக **1.4.2015** முதல் குறைக்கப்பட்டுள்ளது.

இ) மீன்பிடி கயிறுகள், மீன்பிடி மிதவைகள், மீன்வலை முறுக்கு நூல், மீன்பிடி விளக்குகள் மற்றும் மீன்பிடி திருப்புகை போன்ற மீன்பிடிப்புக்கு பயன்படும் துணைப்பொருட்கள் மற்றும் கொசுவலைகள் மீது விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி **1.4.2015** முதல் முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

ஈ) நெய்தலுக்கு முன்பாக நூலுக்கு பசையிடுவது தொடர்பான ஒப்பந்தப் பணிகளுக்கு **01.04.2015** முதல் மதிப்பு கூட்டு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

## 11. நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள்

ஆண்டுதோறும், மாநிலம் முழுவதுமுள்ள வணிகம் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்களை வணிகவரித் துறை நடத்தி, வரிவிதித்தல் தொடர்பான அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்து வருகிறது. இவ்வாண்டும் **19.07.2016** அன்று நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும்

நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் தலைமையேற்றார். இக்கூட்டத்தில் மாண்புமிகு வணிகவரி துறை அமைச்சர், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை கூடுதல் தலைமைச் செயலர், மற்றும் வணிகவரித் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்கள் விரிவாக பரிசீலனை செய்யப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 12. சரக்கு மற்றும் சேவை வரி (GST)

சரக்கு மற்றும் சேவை வரியை செயல்படுத்திட அரசியலமைப்பு (122–வது சட்டத் திருத்தம்) சட்ட முன்வடிவு, **2014, 05.05.2015** அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இந்த மசோதா மாநிலங்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் பார்வைக்கு அனுப்பப்பட்டு, **22.07.2015** அன்று தன்னுடைய பரிந்துரைகளை அளித்தது. தற்பொழுது, மாநிலங்களவையில் இந்த சட்டமுன்வடிவு **3.8.2016** அன்றும் மக்களவையில் **8.8.2016** அன்றும் நிறைவேற்றப் பட்டுள்ளது.

## 13. வணிகர் நலன்

### 13.1 வணிகர் நல வாரியம்

#### 13.1.1 செயல்பாடு

வணிகர்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. வாரியத்தின் தொகுப்பு நிதி 2012–ஆம் ஆண்டில் ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டு, அதன் மூலம் பெறப்படும் வட்டி மற்றும் வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு பெறும் போது அவர்களால் ஒருமுறை செலுத்தப்படும் சந்தாத்தொகைக்கு இணையான அரசின் மானியம் ஆகிய தொகைகளைக் கொண்டு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

#### 13.1.2 உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம்

உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களித்தும், 2006–ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெறாத, தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்களும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய

உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகவும் அரசு வழிவகை செய்துள்ளது.

### 13.1.3 நலத்திட்ட உதவிகள்

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் குடும்பநல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 13.2 வணிகர்களின் குறை தீர்க்கும் நாள்

துறை அலுவலர்களுக்கும், வணிகர்களுக்குமிடையே தகவல் பரிமாற்றத்தில் முன்னேற்றம் ஏற்பட 2014–2015–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது வணிகர்களின் குறை தீர்க்கும் நாள் திங்கட்கிழமைதோறும் ஒவ்வொரு வணிக வரி மாவட்ட துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில் கடைபிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் திங்கட்கிழமை தோறும் துணை ஆணையர் மற்றும் இணை ஆணையர் அலுவலகங்களில் வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இணையதளம் மூலமாக குறைகளைப் பதிவு செய்யவும், கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 14. மத்திய விற்பனை வரி இழப்பீடு

சரக்கு மற்றும் சேவை வரி திட்டத்தை அமல்படுத்தும் விதமாக மத்திய விற்பனை வரி விகிதமானது 4 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக 1.4.2007 முதல் குறைக்கப்பட்டு மற்றும் 1.6.2008 முதல் 2 விழுக்காடாக மேலும் குறைக்கப்பட்டது. மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய மத்திய அரசு ஒப்புக் கொண்டது.

**2007–2008, 2008–2009, 2009–2010, 2010–2011, 2011–2012 மற்றும் 2012–2013 ஆகிய ஆண்டுகளுக்கு தமிழக அரசு, மத்திய விற்பனை வரி இழப்பீட்டுத் தொகையாக ரூ.13,227.46 கோடியினை மத்திய அரசிடம் கோரியிருந்தது. இதில் ரூ.7,655.59 கோடி மத்திய அரசால் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.5,571.87 கோடி மத்திய விற்பனைவரி இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டி நிலுவையில் உள்ளது.**

## 15. கணினிமயமாக்கல்

### 15.1 முழுமையான கணினிமயமாக்கல் திட்டம்

துறையின் முழுமையான கணினிமயமாக்கல் திட்டத்திற்கு ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.230.95 கோடி அனுமதி

வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி ரூ.179.98 கோடிக்கு இறுதி செய்யப்பட்டது. திருவாளர் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ஒருங்கிணைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 09.12.2013 அன்று ஒருங்கிணைப்பாளருடனான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு அன்று முதல் திட்டப் பணிகள் துவங்கப்பட்டன. மேற்கண்ட புதிய திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் வணிகவரித்துறையின் அனைத்து அலுவலகங்களிலும் புதிய கணினிகள் மற்றும் அதற்கான உபகரணங்கள் திருவாளர்கள் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தாரால் நிறுவப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முதன்மையான குறிக்கோள்கள் –

வணிகர்களுக்கான சேவையை மேம்படுத்துதல்

(அ) எங்கிருந்தும் எந்நேரத்திலும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும் வசதி

(ஆ) துறையுடனான நேரடி தொடர்பு குறைக்கப்பட்டு, குறைந்த நேரத்தில் சேவைகள்

(இ) மேலும் அதிகமான வழிகளில் சேவைகள் வழங்குதல்

(ஈ) சேவைகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை

துறையின் மேம்படுத்தப்பட்ட வரி வருவாய் ஈட்டுவதற்கான குறிக்கோளை அடைய உதவும் வழிமுறைகள்—

அ) வரி நிர்வாகத்தை மேம்படுத்த கணினி சார்ந்த முடிவெடுக்கும் அமைப்பு

ஆ) பிற வரிவசூல் செய்யும் துறைகளின் ஒத்துழைப்புடன் வரிவருவாயினை மேம்படுத்துதல்

இ) துறையின் நேரத்தை விரையம் செய்யும் மற்றும் மதிப்பு கூடுதல் இல்லாத நடவடிக்கைகளை பெரிதும் குறைப்பதன் மூலம் துறை அலுவலர்களை அதிக வரி வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் முழுக் கவனம் செலுத்த வகை செய்தல்

ஈ) சிறந்த அமைப்பு சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை அறிக்கைகளை உருவாக்கும் திறன்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இந்தத் திட்டம் 29.01.2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது.**

### 15.1.1 வணிகர்களின் பதிவு

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக https://ctd.tn.gov.in என்ற புதிய இணையதளம் **29.01.2016** முதல் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த இணைய தளம் வழியாக வணிகர்கள் தங்களது பதிவு எண் மற்றும் பதிவுச் சான்றிதழைப் பெற விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பதிவு எண் பெறத் தேவையான விண்ணப்பம் மற்றும் அனைத்து ஆவணங்களையும் சரியாக பதிவேற்றம் செய்தபின், விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு வரிவிதிப்பு அலுவலர் ஒப்புதல் அளித்தபின், மின் சமிக்கை கையொப்பமிடப்பட்ட பதிவுச் சான்றிதழை வணிகரே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### 15.1.2 இணைய வழியில் சோதனைச் சாவடி படிவங்கள் உருவாக்குதல் (படிவம் JJ, KK, LL மற்றும் MM)

வணிகர்களின் சரக்கு போக்குவரத்திற்காக சோதனைச் சாவடிகளில் சமர்ப்பிக்கப்படும் JJ, KK, LL மற்றும் MM படிவங்கள் புதிய இணையதளம் https://ctd.tn.gov.in மூலம் உருவாக்கிக் கொள்ளும் வசதியும் **29.01.2016** முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 15.1.3 மாதாந்திர நமூனாக்கள் சமர்ப்பித்தல்

01.07.2016 முதல் (ஜுன் 2016 மாத நமூனாக்கள் தொடங்கி) வணிகர்கள் தங்களது மாதாந்திர நமூனாக்களை புதிய இணையதளம் https://ctd.tn.gov.in மூலம் மட்டுமே புதிய வடிவத்தில் புதிய இணைப்புகளுடன் சமர்ப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது சுமார் 3,98,000 (மொத்த வரி செலுத்துவோரில் 89 சதவீதம்) வணிகர்கள் மாதந்தோறும் நமூனாக்களை சமர்ப்பித்து வருகிறார்கள்.

### 15.1.4 இணைய வழியில் வரி செலுத்துதல்

வங்கிகளின் இணைய தளம் மற்றும் வங்கிகளில் செலுத்துச் சீட்டு மூலம் வரி செலுத்துதல் ஆகிய வழிகளில் வரி செலுத்தும் வசதி https://ctd.tn.gov.in என்ற புதிய இணைய தளத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, 01.07.2016 முதல் புதிய இணையதளத்தில் 26 வங்கிகள் மூலம் இணையதள வழியிலும், 6 வங்கிகளில் செலுத்துச் சீட்டு மூலமும் வரி செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, மாதந்தோறும் சுமார் 85,000 வணிகர்கள் ரூ.4,600 கோடி வரியினை (துறையின் மொத்த வரி வருவாயின் 87 சதவீதம்) இணைய தள வழியில் செலுத்தி வருகிறார்கள்.

### 15.1.5 மின்னணு முறையில் **'C'** மற்றும் **'F'** படிவங்களை உருவாக்கிக் கொள்ளுதல்

மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர நமூனாக்களின் அடிப்படையில் வணிகர்கள், தாங்களே 'C' மற்றும் 'F' படிவங்களை உருவாக்கிக் கொள்ளும் வசதி நவம்பர் 2012 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை பயன்படுத்துவதன் மூலம் வணிகர்கள் தங்களுக்கான 'C' மற்றும் 'F' படிவங்களைப் பெற வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய தேவை குறைகிறது. தற்போது புதிய இணைய தளம் மூலம் வணிகர்கள் அனைத்து சட்டரீதியான படிவங்களையும் (C,F,H) உருவாக்கிக் கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 15.1.6 ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுவதற்காக, கேட்பு படிவத்தைத் தாக்கல் செய்யும் வசதி

பூஜ்ய வரி விற்பனையில் உள்ளீட்டு வரி திரும்பக் கோரும் ஏற்றுமதியாளர்களுக்கு, மின்னணு முறை மூலம் படிவம் 'W' தாக்கல் செய்யும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தற்போதைய நடைமுறையைக் காட்டிலும் விரைவாக ஏற்றுமதியாளர்களுக்கு வரித் திருப்புகை கிடைக்கிறது. வரித் திருப்புகையின்

அவ்வப்போதைய நிலையினை இணையதளத்தின் வாயிலாக அறியும் வசதி உள்ளது. மேலும், வணிகர்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வர வேண்டிய தேவை மிகவும் குறைகிறது. வரி திருப்புகைக்கு விண்ணப்பிப்பதில் தொடங்கி வணிகவரி அலுவலரின் ஆணையை பதிவிறக்கம் செய்வது வரை அனைத்தும் இணையதள வழியில் செய்துக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

### 15.1.7 இணையதள வழியில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பித்தல்

வணிகர்கள் மின்னணு முறையில் வருடாந்திர நமூனாக்களை சமர்ப்பிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை சுமார் **39,000** வணிகர்கள் இவ்வசதி மூலம் தங்களது நமூனாக்களை மின்னணு முறையில் சமர்ப்பித்துள்ளனர். மேலும், இந்த ஆண்டு சுமார் **2.30** இலட்சம் வணிகர்கள் இந்த வசதியை பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 15.2 தகவல்கள் மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம்

தகவல்களை மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் துறையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வாய்வுக் கூடம் கடைத் தணிக்கையின் போது, வணிகர்களிடமிருந்து பறிமுதல்

செய்யப்பட்ட சேமிப்பு உபகரணங்களிலிருந்து மீளப் பெறும் தகவல்கள், அவர்கள் தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொண்டுள்ள வரி ஏய்ப்பினையும் மற்றும் அதிநவீன தவறுகளையும் கண்டுபிடிக்க உதவும்.

வணிகர்களின் இடத்திலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலைவட்டு போன்ற சேமிப்பு உபகரணங்களிலிருந்து விவரங்கள் ஆய்வு கூடத்தில் மீளப்பெறப்பட்டு பகுத்தாய்வு செய்யப்படும். துறை அலுவலர்களுக்கு தகவல்கள் மீளப் பெறுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

### 15.3 மற்ற இணையவழி சேவைகள்

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள்/ சேவைகள் https://ctd.tn.gov.in என்ற வலைதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன:-

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் அறியும் வசதி

- வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்களை அறிய பேரேடு வசதி

- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி

- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் விவரங்களைத் தெரிந்துக் கொள்ளும் வசதி

- புதிய வலைதளத்தை பயன்படுத்தும் வணிகர்களுக்கு உதவிடும் பொருட்டு **1800 103 6751** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணும், helpdesk@ctd.tn.gov.in என்ற வலைத்தள வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 15.4 வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு (TINXSYS)

வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு, அனைத்து மாநில வணிகவரித் துறைகளிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு ஏதுவாக, மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பொதுவான தீர்வாகும். இத்திட்டம், சலுகை வரி அடிப்படையில் மாநிலங்களுக்கிடையே விற்கப்படும் பொருட்களின் விவரங்களை சிறந்த முறையில் கண்காணிக்கப் பயன்படுகிறது. இதன் மூலம் பொது மக்களும் துறை

அலுவலர்களும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட சட்டப்பூர்வ படிவங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் வணிகர்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை அறிந்துக் கொள்ள முடியும்.

## 16 உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### 16.1 சென்னை நீங்கலாக பிற இடங்களில் வணிகவரி வரிவிதிப்பு வட்டங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும் பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிடவும், சொந்த கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு, 2011–2012–ஆம் ஆண்டில் ரூ.23 கோடி செலவில், 39 அலுவலகங்களை உள்ளடக்கிய 16 கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இவற்றில் 14 இடங்களில் கட்டுமானப் பணிகள் நிறைவுற்று, அவற்றில் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. சிவகங்கையில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கும் நிலையில் உள்ளது. ஒரு கருத்துரு (வால்பாறை) கைவிடப்பட்டுள்ளது.

2012–2013–ஆம் ஆண்டில் ரூ.11.18 கோடி செலவில், 10 இடங்களில் 16 அலுவலகங்களை உள்ளடக்கிய சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

தற்பொழுது, அனைத்து இடங்களிலும் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13.5.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ், 2013–2014–ஆம் ஆண்டில், ரூ.10.85 கோடி செலவில், 7 இடங்களில் 9 வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கிய சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இவற்றில், 3 இடங்களில் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 4 இடங்களில் கட்டடப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

### 16.2 சென்னையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 07.08.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ் சென்னையிலுள்ள 70 வரிவிதிப்பு வட்டங்கள் மற்றும் அதிக வரிசெலுத்துவோர் பிரிவு ஆகியவற்றிற்கு வட சென்னை மற்றும் தென்சென்னையில் இரண்டு வணிக வரி வளாகங்கள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பிற்கு இணங்க, தென் சென்னை வெங்கடாபுரம் கிராமம், கிண்டியில், 52 வணிகவரி

மற்றும் 4 பதிவுத்துறை அலுவலகங்கள் இயங்க ஒருங்கிணைந்த வளாகம் கட்டுவதற்கு ரூ.51.98 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், வடசென்னையில் 34 வணிகவரி அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த வளாகம் கட்டுவதற்கும் ரூ.25.25 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**16.3 சென்னை எழிலகத்திலுள்ள வணிகவரி ஆணையர் அலுவலகத்தை நவீனப்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 07.08.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டப் பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, சென்னை, சேப்பாக்கத்திலுள்ள எழிலகம் கட்டடத்தில் நான்காவது தளத்தில் இயங்கி வரும் வணிகவரி ஆணையர் அலுவலகத்தினை ரூ.1.38 கோடி செலவில் நவீனப்படுத்தவும், முழுமையான கணினி மயமாக்கலுடன் கூடிய கணினி பயன்பாட்டினை செம்மையான முறையில் செயல்படுத்தி, சிறந்த முறையில் பணிபுரிவதற்கு ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்பணி தற்பொழுது முடிவுறும் தருவாயில் உள்ளது.

**16.4 ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம் கட்டுதல்**

2015–2016 ஆம் ஆண்டு வணிகவரித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வணிகவரி மற்றும்

பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் **21.09.2015** அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, சர்வே எண்.**375/1**, வரதராஜபுரம் கிராமம், நசரத் பேட்டை, பூவிருந்தவல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில், **17** வணிகவரி அலுவலகங்களை உள்ளடக்கி ரூ.**10.00** கோடி மதிப்பீட்டில் ஓர் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணி **2016–2017** ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

## 16.5 கட்டடப் பராமரிப்பிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல்

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் **21.09.2015** அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, ரூ.**5,00,43,500/–** மதிப்பீட்டில் வணிகவரி அலுவலகக் கட்டடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், முழுமையான கணினி மயமாக்கல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விலை உயர்ந்த தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பாதுகாக்கும் வகையில் வணிகவரி அலுவலகக் கட்டடங்களை பொதுப்பணித்துறை மூலம் பழுது பார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும், அலுவலகங்களுக்கு தேவையான தளவாடங்களை டான்சி மூலம் கொள்முதல் செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 17. வாகனங்கள் வாங்குதல்

வணிகவரித் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட 238 வாகனங்களில் 227 வாகனங்கள் உபயோகத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளன. பழுதடைந்த நிலையிலுள்ள 11 வாகனங்களுக்கு உபயோகமற்றதென சான்றிதழ் பெற்று புதிய வாகனங்கள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2012–2013–ஆம் ஆண்டில் ரூ.86.38 லட்சம் செலவில் 16 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2014–2015–ஆம் ஆண்டில் ரூ.124.12 லட்சம் செலவில் 22 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2015–2016–ஆம் ஆண்டில் ரூ.84.31 லட்சம் செலவில் 14 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

## 18. 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசு அமைப்புகள் வெளிப்படையாக இயங்குவதற்காக, 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. வணிகப் பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிகவரித்துறை அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், 2005–ஆம்

ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உரிய தகவல்களை உரிய காலக்கெடுவிற்குள் அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் அளித்து வருகிறது.

**கே.சி. வீரமணி**
வணிகவரித் துறை அமைச்சர்